## ஏழாம் வகுப்பு - தமிழ் -மூன்றாம் பருவம்
## வினா விடைத் தொகுப்பு
### இயல் -1
### கவிதைப்பேழை -விருந்தோம்பல்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.மரம் வளர்த்தால்--------- பெறலாம். **விடை: ஆ)மாரி**

2.'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது------------ **விடை: இ) நீர் உலையில்.**

3.மாரி ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்---------------------**விடை: அ) மாரியொன்று.**

**குறுவினா**

**1.பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.**

அங்கவை,சங்கவை.

**2.'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' - எவ்வாறு?**

வறுமையான காலத்திலும் பாரிமகளிர் உலைநீரில் பொன் இட்டு பாணர்களுக்குத் தந்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

**சிந்தனை வினா**

**தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.**

உண்மை பேசுதல்,இரக்கம் கொள்ளுதல்,அன்பு செலுத்துதல்ஆகியன தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகள் ஆகும்.

### கவிதைப்பேழை - வயலும் வாழ்வும்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.உழவர் சேற்று வயலில்---நடுவர். **விடை: ஈ)நாற்று.**

2.வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை- - செய்வர். **விடை: அ) அறுவடை.**

3.'தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது---------------**விடை: ஈ) தேர்ந்து +எடுத்து.**

4.'ஓடை+ எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்--------**விடை: ஆ) ஓடையெல்லாம்.**

**பொருத்துக.**

1.நாற்று - நடுதல் 2.நீர் - பாய்ச்சுதல்
3.கதிர் - அறுத்தல் 4.களை - பறித்தல்

**குறுவினா**

**1.உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?**

நாற்றுப் பறிக்கும்போது உழவர்கள் நண்டுகளைப் பிடித்தனர்.

**2.நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?**

மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்துநெற்கதிரிலிருந்து நெல்மணியைப் பிரிப்பர்.

**சிறுவினா**

**உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் நட்டனர். மடைவழியே நீர்பாய்ச்சினர். நட்ட நெற்பயிர்கள் வரிசையாக வளர்ந்து செழித்தன. பால் பிடித்து முற்றிய நெல்மணிகள் விளைந்தன. அறுவடை செய்தனர் நெல்தாள்களைக் களத்தில் சேர்த்தனர். அவற்றை மாடுகளைக் கொண்டுமிதிக்கச் செய்தனர்.அரிசி வந்தது.

**சிந்தனை வினா**

**உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றி எழுதுக.**

உழவுத்தொழிலுக்கு மாடுகளைப் பயன்படுத்தி இயற்கை எருக்களைக் கொண்டு பயிரிட்டான். பின்னர் டிராக்டர் , உழுகருவிகள்,பூச்சிக்கொல்லி , செயற்கை உரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கினான்.

### உரைநடை -திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.திருநெல்வேலி------------------ மன்னர்களோடு தொடர்பு உடையது. **விடை: இ) பாண்டிய.**

2.இளங்கோவடிகள்------------------ மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார். **விடை: இ) பொதிகை.**

3.திருநெல்வேலி----------------ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. **விடை: ஈ) தாமிரபரணி.**

**பொருத்துக.**

1.தண்பொருநை - தாமிரபரணி.
2.அக்கசாலை - பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம்
3.கொற்கை - முத்துக்குளித்தல்
4.திரிகூடமலை - குற்றாலம்.

**குறுவினா**

**1.தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?**

பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி

**2.கொற்கை முத்து பற்றிக் கூறுக.**

கொற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்து உலகப் புகழ் பெற்றதாக விளங்கியது.

**சிறுவினா**

**1.திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத் தொழில் குறித்து எழுதுக.**

தாமிரபரணி ஆற்றின் மூலம் உழவுத்தொழில் நடைபெறுகின்றது. இங்குக் குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும் கூடப் பயன்பாட்டில் உள்ளன. இருபருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. சிறுதானியங்கள் , எண்ணெய் வித்துகள் , காய்கனிகள் , பருத்தி , பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

**2.திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.**

அகத்தியர் பொதிகை மலையில் வாழ்ந்தார் என்பர். நம்மாழ்வார் , பெரியாழ்வார் , குமரகுருபரர் ஆகியோர் திருநெல்வேலியில் பிறந்து தமிழுக்குச் செழுமை சேர்த்துள்ளனர். ஜி.யு. போப் , கால்டுவெல் , வீரமாமுனிவர் போன்றோரைத் தமிழின்பால் ஈர்த்த பெருமை திருநெல்வேலிக்கு உரியது.

**3.திருநெல்வேலி நகர அமைப்புப் பற்றிக் கூறுக.**

நெல்லையில் உள்ள தெருக்கள் பல அதன் பழமைக்குச் சான்றாக உள்ளன. காவற்புரைத் தெரு,கூழைக்கடைத் தெரு,அக்கசாலைத் தெரு பெரு வணிகம் நடைபெற்ற இடம் பேட்டை ஆகியவை அமைந்துள்ளது.

**சிந்தனை வினா**

**1.மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

மக்கள் மகிழ்ச்சியாக வாழ வயல்களும் காடுகளும் நீர் வளமும் கடைத்தெருக்களும் சுற்றுப்புற மாசு இல்லாமலும் ஒரு நகரம் இருக்க வேண்டும்.

**விரிவானம் - திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்**

**டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**திருநெல்வேலிக் கவிஞர்கள்**

பாரதியார் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுரம். தேசிகவிநாயகனார் தமிழை அழுத்தமாக ஆர்வத்தோடு கற்ற இடம் திருநெல்வேலி நகர்தான்.

எட்டையபுரத்தைச் சார்ந்த கடிகைமுத்துப் புலவர், அவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

திருநெல்வேலி வடகரையில் சீவைகுண்டம் இருக்கிறது.அங்குள்ள பெருமாளைப் பிள்ளைப் பெருமாள் பாடியுள்ளார்.

மனதைக் கவரக்கூடிய இடம் குற்றாலம். சுமார் ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன் திருஞான சம்பந்தர் இங்கு வந்து, குற்றாலம் பற்றிப் பாடினார்.

குற்றாலக் குறவஞ்சி திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய நூல்.

**முடிவுரை**

டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைப் பற்றி அறிந்தோம்.

**அணி இலக்கணம்**

**குறுவினா**

**1.உவமை,உவமேயம்,உவம உருபு விளக்குக.**

ஒப்பிட்டுக் கூறப்படும் பொருளை உவமை. விளக்கப்படும் பொருள் உவமேயம்.

'போல','போன்ற' என்பவை உவம உருபுகள்.

**2.உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி.உவம உருபு மறைந்து வந்தால் அது எடுத்துக்காட்டு உவமை அணி.

**பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**என்னைக் கவர்ந்த நூல்.**

**என்னைக் கவர்ந்த நூல்- திருக்குறள்**

**முன்னுரை**

என்னைக் கவர்ந்த நூல் திருக்குறள்ஆகும். அதனைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**அமைப்பு**

திருக்குறள் அறம்,பொருள்,இன்பம் என்ற மூன்று பெரிய பிரிவையும்133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டுள்ளது. இந்நூலை திருவள்ளுவர் இயற்றியுள்ளார்.

**திருவள்ளுவர்**

தெய்வப்புலவர்,பொய்யில் புலவர்,நாவலர் ஆகிய சிறப்புப்பெயர்களால் திருவள்ளுவர் அழைக்கப்படுகின்றார்.

**சிறப்புகள்**

உலகில் அதிக மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள்.மொழி,மதம்,சாதி,நாடு,இனம் ஆகியவற்றைக் கடந்த உலகப்பொதுமறை.'அ'வில் தொடங்கி 'ன்' இல் திருக்குறள் முடிந்துள்ளது.

**கவர்ந்த காரணம்**

எளிமையான குறட்பாக்கள்,நல்வழிகளைக் கூறுதல் ஆகியவையே திருக்குறள் என்னைக் கவரக் காரணம் ஆகும்.

**முடிவுரை:**

திருக்குறள் மிகவும் இனிமையான நூல்.நான் படித்தேன், என்னைக் கவர்ந்தது. நீங்களும் படியுங்கள்! உங்களையும் கவரும் !

**இயல் - 2**

**கவிதைப்பேழை : புதுமை விளக்கு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1)''இடர் ஆழி நீங்குகவே '' - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் **விடை : அ)துன்பம்**

2)'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது----------. **விடை : இ)ஞானம் + சுடர்**

3)இன்பு+ உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது--------. **விடை : இ)இன்புருகு**

**பொருத்துக.**

1.அன்பு - தகளி 2.ஆர்வம் - நெய்
3.சிந்தை - இடுதிரி 4.ஞானம் - விளக்கு

**குறுவினா**

**1.பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?**

அகல்விளக்காகப் பூமியையும் அன்பையும் உருவகப்படுத்துகின்றனர்.

**2.பொய்கைஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டினார்?**

பொய்கைஆழ்வார் தன் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாமாலை சூட்டினார்.

**சிறுவினா**

**பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.**

பூதத்தாழ்வார் அன்பை அகல்விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் , மனதை திரியாகவும் கொண்டு , ஞானவிளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினார்.

**சிந்தனை வினா**

**பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப்படுத்துகிறார். நீங்கள் எவற்றை எல்லாம் விளக்காக உருவகப்படுத்துவீர்கள்?**

நான் முயற்சி , கடின உழைப்பு , உயிர் , உண்மை,உடல் ஆகியற்றையெல்லாம் விளக்காக உருவகப்படுத்துவேன்.

**கவிதைப் பேழை : அறம் என்னும் கதிர்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1)காந்தியடிகள் எப்போதும் ---------ப் பேசினார்.

**விடை : ஈ)வாய்மையை**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

2)'இன்சொல்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது-------------- **விடை : இ)இனிமை+ சொல்**

3)அறம்+ கதிர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது---------------. **விடை :இ)அறக்கதிர்**

4)'இளமை ' என்னும் சொல்லின் எதிர்ச்சொல்-------.

**விடை : அ)முதுமை**

**பொருத்துக.**

1. விளைநிலம் - இன்சொல் 2. விதை - ஈகை
3. களை - வன்சொல் 4. உரம் - உண்மை

**குறுவினா**

**1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?**

**உண்மையை** எருவாக இடவேண்டும.

**2. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச் சாரம் எதனைக் குறிப்பிடுகின்றது?**

நீக்கவேண்டிய களை **வன்சொல்.**

**சிறுவினா**

**இளம்வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?**

இன்சொல்லை விளை நிலம். ஈகையை விதையாகக் கொண்டு விதைக்க வேண்டும்.வன்சொல் களையை நீக்க வேண்டும்.உண்மைபேசுதல் எரு இட வேண்டும். அன்பு நீரைப் பாய்ச்சஅறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும்.

**சிந்தனை வினா**

**இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

அன்பு , எளிமை , சிக்கனம் , கோபம் கொள்ளாமை , நேர்மை ஆகியன இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகளாகக் கருதுகின்றேன்.

**உரைநடை உலகம் -ஒப்புரவு நெறி**

**சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காக என்பது-----------நெறி.**விடை: ஆ) பொதுவுடைமை.**

2.செல்வத்தின் பயன் -----வாழ்வு.**விடை : இ) ஒப்புரவு**

3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை -------- என்றும் கூறுவர். **விடை: அ) மருந்து**

4.உலகம் உண்ண உண்: உடுத்த உடுப்பாய் என்று கூறியவர்----------- **விடை: ஆ)பாரதிதாசன்.**

**எதிர்ச்சொற்களைப் பொருத்துக.**

எளிது × **அரிது.** ஈதல் × **ஏற்றல்.**
அந்நியர் × **உறவினர்.** இரவலர் × **புரவலர்.**

**தொடர்களில் அமைத்து எழுதுக.**

குறிக்கோள் - **என் குறிக்கோள் மருத்துவர் ஆவது.**
கடமைகள் - **எனக்குச் சில கடமைகள் உள்ளன.**
வாழ்நாள் - **வாழ்நாள் குறிக்கோள் மருத்துவர் ஆவது.**
சிந்தித்து - **நாம் சிந்தித்து செயல்பட வேண்டும்.**

**குறுவினா**

**1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?**

பொருளீட்டுவதைவிடப் பெரிய செயல் முறையாக அனுபவிப்பதும் பிறருக்குக் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

**2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?**

பொருளீட்டுவதன் நோக்கம் மற்றவர்களுக்கு வழங்கவும், வாழ்வித்து வாழ்வதும் ஆகும்.

**சிறுவினா**

**1.ஒப்புரவுக்கும அடிகளார் தரும் விளக்கம் யாது?**

உதவியைக் கட்டுப்பாட்டு உணர்வுடன், உதவி பெறுபவரை உறவினராக எண்ணி, உரிமை உடையவராக நினைத்து, உதவிசெய்தவதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.

**2. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?**

ஊருணி, தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது, பழுத்த பயன்மரத்தின் கனிகளை அனைவரும் எடுத்து அனுபவிக்கலாம். பயன்மரம் பழங்களைத் தருவது உரிமை எல்லைகளைக் கவனத்தில் கொண்டல்ல. மருந்துமரம் நோயுடையார் எல்லாரும் பயன்படுத்தலாம்.

**சிந்தனை வினா**

**ஒப்புரவுக்கும் உதவிசெய்தலுக்கும் வேறுபாடு யாது?**

| ஒப்புரவு | உதவி செய்தல் |
|---|---|
| உதவி தேவைப்படுவோர் அவர்களே உரிமை எடுத்துக்கொள்வது. | ஏதேனும் பயனுக்குக்காக பிறருக்கு உதவி சேய்தல் |

**விரிவானம் : உண்மை ஒளி**

**முன்னுரை**

'உண்மை ஒளி' படக்கதையைக் கதையாகச் சுருக்கிக் காண்போம்.

**உண்மை ஒளி**

ஜென் குரு ஒரு நாள் உண்மை ஒளி எது ? என்பதைப் பற்றிப் பாடம் சொல்லிக் கொண்டு இருந்தார். சீடர்களிடம் , "இருள் கலைந்து வெளிச்சம் வந்துவிட்டது" என்று எப்படி அறிவீர்கள் ?என்றார். அதற்கு சீடர்கள் ஒவ்வொருவரும் ஒரு பதிலைக் கூறினர்.இவை எல்லாம் தவறு என்றார் குரு. ஒரு மனிதரைக் காணும் போது என் உடன் பிறந்தவர் என்று எப்போது உணர்கிறீர்களோ , அப்போது தான் உண்மையான ஒளி உங்களுக்குள் ஏற்படுகிறது என்றார் குரு.

**திருடனுக்கு அறிவுரை**

ஒரு நாள் குரு குதிரையில் அருகில் உள்ள சிற்றூருக்குப் புறப்பட்டுச் செல்கின்றார். சாலையோரத்தில. ஒருவன் மயங்கிக் கிடந்தான். குரு இரக்கம் கொண்டு அவனை குதிரை மீது அமரச்செய்தார். அவன் குதிரையைத் திருடிச் சென்றுவிட்டான்.குதிரை வாங்க குரு குதிரைச் சந்தைக்குச் சென்றார். அங்கு அந்த திருடன் குதிரையை விற்றுக் கொண்டிருந்தான். குரு, நான் ஏமாந்து போனது தெரிந்தால் உண்மையில் சாலையில் மயக்கம் அடைந்து யார் கிடந்தாலும் அவருக்கு யாரும் உதவ மாட்டார்கள் என்றார்.குருவின் பெருமையை நினைத்து தலைகுனிந்தான் திருடன்.

**முடிவுரை**

'உண்மை ஒளி' எது என்பதை அறிந்தோம்.

**கற்கண்டு : அணி இலக்கணம்**

**குறுவினா**

**1)உருவக அணியை விளக்குக.**

உவமை , பொருள் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.

சான்று :வையகம் தகழியாக ''(பூமி அகல் விளக்கு)

**2.உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| உருவக அணி | ஏகதேச உருவக அணி |
|---|---|
| இரு பொருள்களை உருவகப்படுத்ததுதல். | ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் வருவது. |

**கட்டுரை எழுதுக. ''ஒற்றுமையே உயர்வு''**

**முன்னுரை**

''ஒற்றுமையே உயர்வு'' என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஒற்றுமையே உயர்வு**

1.'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்றார் பாரதியார்.

2.ஒற்றுமையால் நம் நாடே உயரும்.

3.நம் மக்கள் காந்தியடிகளுடன் ஒற்றுமையாகச் செயல்பட்டதால் தான் நமக்கு விடுதலை கிடைத்தது.

4.புயல் , சுனாமி , வெள்ளப் பெருக்கு , பூகம்பம் ஏற்படும் போது பல சமூக சேவை அமைப்புகள் ஒற்றுமையுடன் மக்களைக் காப்பற்றினர்.

5. அல்லா , இயேசு , சிவன் ஆகிய மும்மதக் கடவுள்களும் மூன்றெழுத்தில் ஒன்றுபட்டு நிற்பதைப் பார்க்கும் போது நாம் அனைவரும் ஒன்றுபட்டு மதநல்லிணக்கத்தோடு வாழவேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

**முடிவுரை**

அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை அறிந்து செயல்படுவோம்.

**வாழ்வியல் : திருக்குறள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1)-------ஒரு நாட்டின் அரணன்று.**விடை : ஆ)வயல்**

2)மக்கள் அனைவரும் ------------- ஒத்த இயல்புடையவர்கள். **விடை : அ)பிறப்பால்**

3) 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது------------. **விடை : இ)நாடு+ என்ப**

4.கண்+ இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்-----------**விடை : ஈ)கண்ணில்லது**

**பின்வரும் குறட்பாக்களில் உவமையணி பயின்று வரும் குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

2.வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

**குறுவினா**

1.ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?

பொருள் , கருவி ,காலம் , தன்மை ,இடம் ஆகிய ஐந்தும் ஆராய்ந்து அறிந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

2.ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?

நீர் ,நிலம்,மலை ,காடு

3.சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

பசி,நோய்,பகை ஆகியவை சேராமல் நல்லவகையில் இருப்பதே நாடு ஆகும்.

**இயல் - 3**

**கவிதைப் பேழை : மலைப்பொழிவு**

**சரியான விடையைத் தோந்தெடுத்து எழுதுக.**

1.மனிதவாழ்க்கையில் தேவைப்படுவது---
**விடை :பொறுமை**

2. சாந்த குணம் உடையவர்கள் -முழுவதையும் பெறுவர்.
**விடை: உலகம்**

3.'மலையளவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-------. **விடை :மலை+ அளவு**

4. 'தன்னாடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----------------. **விடை : தன் +நாடு**

5. இவை + இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது---------------. **விடை :இவையில்லாது**

**குறுவினா**

**1)இந்த உலகம் யாருக்கு உரியது?**

அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே இந்த உலகம் உரியது.

**2)உலகம் நிலைதடுமாறக் காரணம் யாது?**

சாதிகளும் கருத்து வேறுபாடுகளும் உலகம் நிலைதடுமாறக் காரணம் ஆகும்.

**3)வாழ்க்கை மலர்ச் சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?**

வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற நல்ல உள்ளத்தோடு வாழ வேண்டும்.

**சிறு வினா**

**1.சாந்தம் பற்றி இயேசு காவியம் கூறுவன யாவை?**

சாந்தம் என்ற அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே இந்த உலகம் உரியது.அவர்களே தலைவர்கள் என்ற உண்மையை இயேசுநாதர் கூறினார்.

**சிந்தனை வினா**

**எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ என்ன செய்ய வேண்டும்?**

எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ மதம் , சாதி ஏழை , பணக்காரன் ஆகிய எண்ணம் ஒழிய வேண்டும். அனைவரும் ஒன்றென நினைக்க வேண்டும்.

**கவிதைப்பேழை : தன்னை அறிதல்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்த எழுதுக.**

1. கூடுகட்டத் தெரியாத பறவை---. **விடை: ஆ)குயில்**

2.'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----------. **விடை : இ)தான் +ஒரு**

**குறுவினா**

**1.காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச்சொன்னது?**

காக்கைக்குக் கூட்டில் உள்ள ஒன்று , குயில் குஞ்சு என்று தெரியவந்ததால்,அதனைப் போகச் சொன்னது.

**2.குயில் குஞ்சு தன்னை எப்போது 'குயில்' என உணர்ந்தது?**

ஒரு விடியலில் குயில் குஞ்சு "கூ'' என்று கூவியது , அன்று தான் ஒரு 'குயில்' என உணர்ந்தது

**சிறுவினா**

**குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.**

காக்கைக்குக் கூட்டில் உள்ள ஒன்று , குயில் குஞ்சு என்று தெரியவந்ததால்,அதனைப் போகச் சொன்னது. காகமே தாய் என்று நினைத்த குயில்,அந்த மரத்திலேயே வாழ ஆரம்பித்தது. 'கா' என்று கத்த முயற்சித்தது , அதனால் முடியவில்லை.அதற்குக் கூடுகட்டத் தெரியாது. அதற்கு யாரும் இல்லை. தானே இரை தேடத் தொடங்கியது.ஒரு விடியலில் குயில் குஞ்சு "கூ'' என்று கூவியது , அன்று தான் ஒரு 'குயில்' என உணர்ந்தது

**சிந்தனை வினா**

**உங்களிடம் உள்ள தனித்தன்மைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

தன்னம்பிக்கை,உண்மை பேசுவேன்,இரக்கம் காட்டுவேன்,எதற்கும் கவலைப்பட மாட்டேன். ஆகியவை என்னிடம் உள்ள தனித்தன்மைகள் ஆகும்.

**உரைநடை உலகம் - கண்ணியமிகு தலைவர்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. காயிதேமில்லத் ---------பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார். **விடை : எளிமை**
2. 'காயிதேமில்லத்' என்னும் அரபுச்சொல்லுக்குச் --------என்பது பொருள். **விடை : சமுதாய வழிகாட்டி**
3. விடுதலைப்போராட்டத்தின் போது காயிதேமில்லத் ------------------இயக்கத்தில் கலந்துகொண்டார். **விடை : ஒத்துழையாமை**
4. காயிதேமில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் **விடை : நாடாளுமன்றம்**
5. 'எதிரொலித்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----------. **விடை : எதிர் + ஒலித்தது**

6.முதுமை + மொழி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ------------. **விடை : முதுமொழி**

**குறுவினா**

**1. விடுதலைப் போராட்டத்தில் காயிதேமில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.**

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொள்ள காந்தியடிகள் இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார். அது காயிதேமில்லத்தின் மனதில் விடுதலை உணர்வை ஏற்படுத்தியது. கல்வியை விட நாட்டு விடுதலை மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.

**2. காயிதேமில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் எளிமையைக் கடைபிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.**

காயிதேமில்லத் அவர்கள் தன் மகனின் திருமணத்தில் பெண்வீட்டாரிடம் மணக்கொடை வாங்காமல், ஆடம்பரம் இல்லாமல் மிக எளிமையாக மகன் திருமணத்தை நடத்தினார்.

**சிறுவினா**

**ஆட்சிமொழி பற்றிய காயிதேமில்லத்தின் கருத்தை விளக்குக.**

"பழமையான மொழிகளில் ஒன்றைத்தான் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றால் , அது தமிழ்மொழி என்று தான் நான் உறுதியாகச் சொல்வேன். மண்ணிலே முதன் முதலாகப் பேசப்பட்ட மொழி தமிழ்மொழி.அது மிகப்பழமையான மொழி. அதனைத் தான் நாட்டின் ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும் ''என்று குறிப்பிட்டார்.

**சிந்தனை வினா**

**நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணியைச் செய்வீர்கள்?**

சாதி , மத ஏற்றத்தாழ்வுகளை நீக்குவேன்.இந்திய நதிகளை இணைப்பேன்.வறுமையைப் போக்குவேன்.

**விரிவானம் : பயணம்**

**முன்னுரை**

'பயணம்' என்னும் கதையைச் சுருக்கிக் காண்போம்.

**ஆசை**

ஒருவர் மிதிவண்டியின் மீது ஆசை வைத்துத் தனது மூன்றாவது மாதச் சம்பளத்தில் மிதி வண்டி ஒன்றை வாங்குகின்றார். மிதிவண்டியில் செல்லுவது தான் அவருக்குப் பொழுதுபோக்கு.

**பயணம்**

மங்களூர் செல்ல வேண்டும் என்பது அவரின் நீண்ட நாள் ஆசை. இரண்டு நாட்கள் மிதிவண்டி பயணத்தில் ஹாசனை அடைந்தார். பெரிய இறக்கத்தில் இறங்கும் போது மிதிவண்டியில் காற்று இறங்கிவிட்டது. காற்றடிக்கும் கருவியும் இல்லை.அங்கக் கடையும் இல்லை.

**உதவி**

ஒரு குடிசை வீடு தெரிந்தது. அதில் ஒரு சிறுவனும் அவனது அம்மாவும் இருந்தனர்அவர்கள் இவருக்கு உதவுகின்றனர். சிறுவனுக்கு மிதிவண்டி ஓட்டக் கற்றுக்கொடுக்கிறார்.அம்மாவின்அனுமதி பெற்று , தன் மாமா வீட்டில் விடச்சொல்லி சிறுவன் கேட்டான். மாமா வீடு நெருங்கும் சிறிது தூரத்திற்கு முன்னதில் இருந்து மிதிவண்டியை மீண்டும் சிறுவன் ஓட்டக் கேட்டான். மிதிவண்டி சிறுவன் ஓட்டிக்கொண்டு இருக்கும் போது , அவனிடம் சொல்லாமல் பேருந்தில் ஏறி செல்கின்றார்

**முடிவுரை**

சிறுவனின் மனம் மகிழச் செய்த அவரின் கருணை பயணம் பாராட்டுக்குரியது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**கற்கண்டு - ஆகுபெயர்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகிவருவது------------. **விடை :பொருளாகுபெயர்**

2.இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது------------. **விடை : சினையாகுபெயர்**

3.மழை சடசடவெனப் பெய்தது. - இத்தொடரில் அமைந்துள்ளது----------. **விடை : இரட்டைக்கிளவி**

4.அடுக்குத்தொடரில் ஒரே சொல் ----------முறை வரை அடுக்கி வரும். **விடை : நான்கு**

**குறுவினா**

**1.ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?**

ஒரு பெயர்ச்சொல் அதன் பொருளைக் குறிக்காமல் , அதனோடு தொடர்பு உடைய வேறு ஒன்றிற்கு வரும் போது அது ஆகுபெயர் ஆக மாறும்.

**2.இரட்டைக்கிளவி என்பது யாது ? சான்று தருக.**

இரட்டையாக வந்து ,பிரித்தால் தனிப்பொருள் தராத சொற்கள் இரட்டைக்கிளவி ஆகும்.சான்று :சடசட

**சிறு வினா**

**1.பொருளாகுபெயரையும் சினையாகுபெயரையும் வேறுபடுத்துக.**

| பொருளாகு பெயர் | சினையாகு பெயர் |
|---|---|
| ஒரு பொருளின் பெயர் சினை(உறுப்பு)க்கு ஆகிவருவது பொருளாகு பெயர். | சினையின் பெயர் பொருளுக்கு ஆகிவருவது சினையாகுபெயர். |

**2.இரட்டைக்கிளவி , அடுக்குத்தொடர் ஒப்பிடுக.**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| பிரித்தால் பொருள் தரும். | பிரித்தால் பொருள் தராது. |
| நான்கு முறை வரை அடுக்கி வரும். | இரண்டு முறை மட்டுமே வரும். |
| சொற்கள் தனியே நிற்கும். | சொற்கள் இணைந்தே நிற்கும். |

**கடிதம் எழுதுக**

**உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

23,கவிமணி நகர்,
ஈரோடு – 1,
நாள்:---------.

**அன்புள்ள அத்தைக்கு,**

அண்ணன் மகன் எழுதும் கடிதம். அனைவரும் நலமாக இருக்கின்றோம். அதுபோல அங்கு அனைவரும் நலமா?அடுத்த மாதம் முதல் வாரம் முதல் எங்கள் ஊரில் திருவிழா நடைபெற இருக்கின்றது. ஒரு வாரம் இத்திருவிழா நடைபெறும். தாங்களும் மாமாவும் அவசியம் கலந்துகொள்ள வேண்டும். அன்புடன் முடிக்கின்றேன்.

**இப்படிக்கு,**
-----------------

**உறைமேல் முகவரி**

**பெறுநர் :**

த.பாரதி,
56,வைகை நகர்,
திருச்சி -2.

**கலைச்சொல் அறிவோம்.**

**இயல்-1**

நாகரிகம் - civilization.
நாட்டுப்புறவியல் - folklore.
அறுவடை - harvest.
நீர்ப்பாசனம் - irrigation.
அயல்நாட்டினர் - foreigner.
வேளாண்மை - agriculture.
கவிஞர் - poet.
நெற்பயிர் - paddy.
பயிரிடுதல் - cultivation.
உழவியல் - agronomy.

**இயல்-2**

குறிக்கோள் - Objective
செல்வம் - Wealth
லட்சியம் - Ambition
பொதுவுடைமை- Communism
கடமை - Responsibility
அயலவர் - Neighbour
வறுமை - Poverty
ஒப்புரவு நெறி - Recipropcity
நற்பண்பு-Courtesy

**இயல் -3**

சமயம் - Religion
எளிமை -Simplicity
ஈகை-Charity
கண்ணியம் -Dignity
கொள்கை -Doctrine
தத்துவம் -Philosophy
நேர்மை -Integrity
வாய்மை -Sincerity
உபதேசம் -Preaching
வானியல் - Astronomy

**ஆக்கம்:**

ச.சேட்டு மதார்சா,
ப.ஆ.தமிழ், ஈ.கே.எம்.அ.க.மதரஸா
இஸ்லாமியா உ.பள்ளி
ஈரோடு - 638001.
அலைபேசி : 8883681115

ச.சேட்டு மதார்சா, www.Padasalai.Net